**APRIL 2021** **60566/CYA4C**

Time : Three hours Maximum : 75 marks

PART A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions.

1. What is purchase consideration?
கொள்முதல் மறுபயன் என்றால் என்ன?

2. What is meant by alteration of share capital?
பங்கு முதலை மாற்றியமைத்தல் என்றால் என்ன?

3. What is meant by capital reduction?
முதல் குறைப்பு என்பது யாது?

4. State the need for valuation of goodwill.
நற்பெயர் மதிப்பிடுவதற்கான தேவை யாது?

5. What is meant by Super Profit?
மிகை இலாபம் என்றால் என்ன?

6. State the need for valuation of shares.
பங்குகளை மதிப்பிடுவதற்கான தேவை யாது?

7. What is meant by shareholders' funds?
பங்குநர்களின் நிதி என்பதின் பொருள் யாது?

8. Who is a Liquidator?
கலைப்பாளர் என்பவர் யார்?

9. What is the meaning of Preferential Creditors?
முதன்மைக் கடனீந்தோர்கள் என்றால் என்ன?

10. M Ltd., agreed to absorb N Ltd., by paying Rs. 10,00,000 to the shareholders. In addition, they agreed to settle 1000, 8 % Debentures of Rs. 100 each in N Ltd at 20% premium by issuing their own debentures of Rs.10 each at 96%. Ascertain the face value and actual issue value of debentures to be issued.

‘எம்’ வரையறு நிறுமம் ‘என்’ வரையறு நிறும பங்குநர்களுக்கு ரூ. 10,00,000 அளித்து ‘என்’ நிறுமத்தை எடுத்துக்கொண்டது. இதைத் தவிர, ‘என்’ நிறுமத்தின் ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 1,000, 8% கடனீட்டுப்பத்திரங்களை 20% முனைமத்தில் எடுத்துக்கொண்டு, அதற்கு ஈடாக ஒன்று ரூ. 100 மதிப்புள்ள தனது கடனீட்டுப்பத்திரங்களை 96% ல் அளித்துது. கொடுக்கவேண்டிய கடனீட்டுப்பத்திரங்களின் முக மதிப்பு மற்றும் உண்மையான மதிப்பு கணக்கிடுக.

11. X' Company Limited with a Share Capital of 10,000 Equity Shares of Rs.100 each fully paid caries out by, proper resolution, a sub-division into shares of Rs.10 each. Show the necessary Journal Entry to give effect to the above transaction.

முழுமையான செலுத்தப்பட்ட ஒன்று ரூ. 100 வீதம் 10,000 நேர்மை பங்குகளைப் பெற்றிக்கும் எக்ஸ் வரையறு நிறுமம் முறையான் தீர்மானம் இயற்றி அவற்றை ஒன்று ரூ. 10 வீதம் பிரிக்க முடிவெடுத்துள்ளது. இதனை நிறைவேற்றும் குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

12. Calculate the amount of goodwill on the basis of 2 years purchase of the last five years' average profits. The profits for the last five years are: 8,200; 10,500; 5,100; 7,700; 12,000.

கடந்த 5 ஆண்டு சராசரி இலாபத்தில் 2 ஆண்டு கொள்முதல் எனக்கொண்டு நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக. கடந்த 5 ஆண்டு இலாபம் வருமாறு : 8,200; 10,500; 5,100; 7,700; 12,000.

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE Questions

13. Calculate the purchase consideration of the following terms:

(a) Ram & Co Ltd., is absorbed by Krishnan & Co Ltd., the consideration being

(b) Assumption of the liabilities

(c) The discharge of the debentures at a premium of 7.5% by issue of 7.5% debentures in Krishnan & Co Ltd.

(d) A cash payment of Rs.100 per share and the exchange of 12 shares of Rs.20 each in the Krishnan & Co Ltd at an agreed value of Rs.25 per share for every share in Ram & Co Ltd.

(e) The liquidation expenses of Rs.8,000 to be borne by Ram & Co Ltd.

பின்வரும் பகர்வுகளைக் கொண்டு கொள்முதல் மறு பயன் கணக்கிடுக. கிருஷ்ணா வரையறு நிறுமம் இராம் வரையறு நிறுமத்தை எடுத்துக்கொண்டது. மறு பயன் வருமாறு :

(அ) கிருஷ்ணா வரையறு நிறுமம் இராம் வரையறு நிறுமத்தை எடுத்துக்கொண்டது மறுபயன் வருமாறு.

(ஆ) அனைத்து பொறுப்புகளையும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(இ) இராம் நிறும 75% கடனீட்டுப்பத்திரங்களை 7.5% முனைமத்தில் எடுத்துக்கொண்டு, அதற்க ஈடாக கிருஷ்ண நிறுமம் தனது 7.5% கடனீட்டுப்பத்திரங்களை அளித்துது.

(ஈ) இராம் நிறுமத்திலிருக்கும் ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 100 ரொக்கமாக அளித்தது. மேலும், இராம் நிறுமத்திலிருக்கும் ஒவ்வொரு பங்கிற்கும், கிருஷ்ணா நிறுமம் தனது ஒன்று ரூ. 20 மதிப்புள்ள 12 பங்குகளை ஒன்று ரூ. 25 வீதம் சந்தை மதிப்பில் பரிமாற்றம் செய்து கொண்டது.

(உ) கலைப்பு செலவான ரூ. 8,000 த்தை இராம் நிறுமம் ஏற்றுக்கொண்டது.

14. Guha Limited was formed to acquire the businesses of Bharath Limited and Sarath Limited. Sarath Limited had a share capital of Rs.5,00,000, General Reserve of Rs.2,00,000. It accepted a purchase consideration of Rs.6,35,000. Bharath Limited's capital was Rs.16,00,000 and Reserves Rs.7,00,000 and the agreed upon purchase price was Rs.22,30,000. Determine the Reserves to be shown in the books of Guha Limited if the amalgamation is in the nature of merger.

பரத் வரையறு நிறுமம் மற்றும் சரத் வரையறு நிறுமம் ஆகிய இரண்டையும் கொள்முதல் செய்வதற்கு குகா வரையறு நிறுமம் உருவாக்கப்பட்டது. சரத் வரையறு நிறுமத்தில் ரூ. 5,00,000 பங்கு முதலும் ரூ. 2,00,000 பொதுக்காப்பும் இருந்தன. அந்நிறுமம் ரூ. 6,35,000 கொள்முதல் மறுபயனாக ஏற்றுக்கொண்டது. பரத் வரையறு நிறுமத்தில் ரூ. 16,00,000 பங்கு முதலும் ரூ. 7,00,000 பொதுக்காப்பும் இருந்தன. அந்நிறுமம் ரூ. 22,30,000 கொள்முதல் மறுபயனாக ஏற்றுக்கொண்டது. குகா வரையறு நிறுமத்தில் இணைப்பு முறையில் ஒருங்கிணைப்பு ஏற்பட்டது. எனக்கொண்டு அந்நிறுமத்தில் காப்பு தொகை எவ்வளவு என்பதைக் கணக்கிடுக.

15. After getting approval of the Court, X Co Ltd., has decided to issue to its equity shareholders the following in exchange for 60,000 shares of Rs.10 each in order to write off intangible assets of Rs.100,000 and fictitious assets Rs.1,60,000:

- Fully paid equity shares upto the extent of two-sixths of the present holding;
- 6% Preference Shares to the effect of one-fourth of the above new equity shares

Show Journal entries in the books of X Co Ltd.

ரூ. 1,00,000 மதிப்புள்ள புலனாகா சொத்துக்களையும், ரூ. 1,60,000 மதிப்புள்ள பெயரளவு சொத்துக்களையும் போக்கெழுதுவதற்காக நீதிமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றபின் 'எக்ஸ்' வரையறு நிறுமம் தனது பங்குநர்கள் வைத்திருக்கும் ஒன்று ரூ. 10 வீதம் 60,000 பங்குகளுக்கு பதிலாக பின்வருவனவற்றை பரிமாற்றம் செய்தது.

- தற்போது வைத்திருக்கும் பங்குகளில் 1/6 அளவிற்கு முழுவதும் செலுத்திய நேர்மைப் பங்குகள்
- மேற்கூறிய நேர்மைப் பங்குகளின் அளவில் 1/4 அளவிற்கு 6% முன்னுரிமைப் பங்குகள்.

'எக்ஸ்' நிறுமம் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

16. Find the remuneration payable to liquidator with the help of the following information:

Preferential Creditors Rs.1,400; Unsecured Creditors Rs.81,000; Amount available for unsecured Creditors after paying preferential Creditors, before paying liquidator's remuneration Rs.74,154; Liquidator's remuneration = 2% on the amount distributed to unsecured creditors.

பின்வரும் தகவல்களைக் கொண்டு கலைப்பாளரின் ஊதியம் எனக் கணக்கிடுக.

முன்னுரிமை கடனீந்தோர்கள் ரூ. 1,400, பிணையக் கடனீந்தோர்கள் ரூ. 81,400, முன்னுரிமை கடனீந்தோருக்கான தொகையை செலுத்திய பின், கலைப்பாளரின் ஊதியம் செலுத்தும் முன் பிணையமற்ற கடனீந்தோருக்கு கொடுக்க கிடைத்த தொகை ரூ. 74,154, கலைப்பாளரின் ஊதியம் = பிணையமற்ற கடனீந்தோருக்கு கொடுக்கும் தொகையில் 2% ஆகும்.

17. The average net profits of a business as adjusted for valuation of goodwill amounted to Rs.2,35,450. The net tangible assets employed were of the value of Rs.14,50,000. But upon valuation, they amounted to Rs.15,00,000. Assuming that 10% represented a fair commercial return, calculate the amount of goodwill by capitalizing super profits.

நற்பெயரை மதிப்பிட சரிசெய்து கணக்கிடப்பட்ட ஆண்டு சராசரி நிகர இலாபம் ரூ. 2,35,450 ஆகும். வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட நிகர புலனாகும் சொத்துக்களின் மதிப்பு ரூ. 14,50,000. ஆனால், அவற்றின் சந்தை மதிப்பு ரூ. 15,00,000 ஆகும். வியாபாரத்தில் கிடைக்கும் நியாயமான வருமானம் 10% எனக் கொண்டு, மிகை இலாபத்தை முதல்படுத்தும் முறையில் நற்பெயரைக் கணக்கிடுக.

18. The issued share capital of a company was Rs.10,00,000 consisting of 10,000 Equity shares of Rs.100 each. The net profit for the last five years were: Rs.1,00,000; Rs.80,000; Rs.1,20,000; Rs.1,60,000 and Rs.1,40,000 out of which 20% was placed to reserve. This proportion is considered as reasonable in the industry and where a fair investment return may be taken as 12%. Compute the value of share under yield method.

10,000 நேர்மைப் பங்குகள், பங்கொன்றுக்கு ரூ. 100 வீதம் ரூ. 10,00,000 வெளியிட்ட மூலதனத்துடன் ஒரு நிறுமம் செயல்பட்டு வருகிறது. இதன் ஐந்து ஆண்டு நிகர இலாபம் பின்வருமாறு : ரூ. 1,00,000, ரூ. 80,000, ரூ. 1,20,000, ரூ. 1,60,000 மற்றும் ரூ. 1,40,000. இந்த இலாபத்தில் 20% காப்பில் வைக்கப்பட்டது. அந்த நிறுமம் ஈடுபட்டுள்ள தொழிலில் இந்த விகிதம் நியாயமானதாக கருதப்படுகிறது. மேலும் நியாயமான முதலீட்டு வருமானம் 12% ஆகும். இந்த நிறுமத்தின் பங்கு மதிப்பினை ஈட்டு முறையில் கணக்கிடுக.

19. Enumerate the factors that affect the valuation of Goodwill.

நற்பெயர் மதிப்பிடலை பாதிக்கும் காரணிகளை எழுதுக.

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. The following is the balance sheet of Harish Company Limited as on 31.3.2018

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share capital (6,000, 6% Preference shares of Rs.100 each) | 6,00,000 | Goodwill | 45,000 |
| 12,000 Equity Shares of Rs.100 each | 12,00,000 | Land and Buildings | 6,00,000 |
| 8% Debentures | 3,00,000 | Plant and Machinery | 9,00,000 |
| Bank overdraft | 3,00,000 | Stock | 1,30,000 |
| Sundry creditors | 1,50,000 | Debtors | 1,40,000 |
| | | Cash | 15,000 |
| | | Profit and Loss | 7,00,000 |
| | | Preliminary expenses | 20,000 |
| | 25,50,000 | | 25,50,000 |

On the above date, the company adopted the following scheme of reconstruction:

(a) The equity shares are to be reduced to shares of Rs.40 each fully paid and the preference shares to be reduced to fully paid shares of Rs.75 each.

(b) The debenture holders took over stock and debtors in full satisfaction of their claims.

(c) The land and building to be appreciated by 30% and plant and machinery to be depreciated by 30%.

(d) The fictitious and intangible assets are to be eliminated.

(e) Expenses of reconstruction amounted to Rs.5,000.

Pass Journal entries and prepare the reconstructed balance sheet.

31.3.2018 ல் ஹரிஷ் வரையறு நிறுமத்தின் இருப்பு நிலை குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் (6,000, 6% முன்னுரிமைப் பங்குகள் ரூ. 100 வீதம்) | 6,00,000 | நற்பெயர் | 45,000 |
| 12,000 சாதாரண பங்குகள் ரூ. 100 வீதம் | 12,00,000 | நிலம், கட்டடம் | 6,00,000 |
| 8% கடனீட்டு பத்திரங்கள் | 3,00,000 | பொறி எந்திரம் | 9,00,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 3,00,000 | சரக்கிருப்பு | 1,30,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,50,000 | கடனாளிகள் | 1,40,000 |
| | | ரொக்கம் | 15,000 |
| | | இலாப நட்ட கணக்கு | 7,00,000 |
| | | தொடக்க செலவுகள் | 20,000 |
| | 25,50,000 | | 25,50,000 |

நாளது தேதியில் நிறுமம் மறு நிர்மானித்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

(அ) சாதாரண பங்குகள் ரூ. 40 வீதம் முழுவதும் செலுத்திய பங்குகளாக குறைக்கப்படவும், முன்னுரிமை பங்குகள் ரூ. 75 வீதம் முழுவதும் செலுத்திய பங்குகளாகவும் குறைக்கப்பட உள்ளது.

(ஆ) கடன் பத்திரம் வைத்திருப்போர் தங்களது கோரல்களுக்கு முழுவதுமாக சரக்கு மற்றும் கடனாளிகளை எடுத்துக் கொண்டார்கள்.

(இ) நிலம் மற்றும் கட்டட மதிப்பு 30% உயர்த்தப்படவுள்ளது. பொறி எந்திரம் 30% தேய்மானம் செய்யப்படவுள்ளது.

(ஈ) பெயரளவு மற்றும் புலனாகா சொத்துக்கள் அகற்றப்படவுள்ளது.

(உ) மறு நிர்மானித்தல் செலவு ரூ. 5,000.

நிறும ஏடுகளில் குறிப்பேடுப் பதிவுகள் தருக. மறு நிர்மானத்தின் பின் இறுதி நிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

21. On 31.3.2018, the date of liquidation of a company, its balance sheet was as under:

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share capital | | Land and Buildings | 4,00,000 |
| 7% Preference Share Capital | 3,00,000 | Plant and Machinery | 1,60,000 |
| 6,000 Equity Shares of Rs.10 each, Rs.8 paid up | 48,000 | Stock | 4,00,000 |
| 3,000 Equity Shares of Rs. 10 each, Rs.7 paid up | 21,000 | Debtors | 6,40,000 |
| 6% Debentures of Rs.100 each | 12,00,000 | Cash | 51,000 |
| Interest on debentures due | 72,000 | | |
| Bills Payable | 2,000 | | |
| Sundry creditors | 8,000 | | |
| | 16,51,000 | | 16,51,000 |

The assets were realized as under:

Land and buildings Rs.3,50,000; Plant and machinery Rs.2,00,000; Debtors Rs.6,00,000; Stock Rs.4,61,000; Liquidation expenses Rs.2,000.

Remuneration of liquidators: $\frac{1}{2}$% on the assets realized including cash and 1% on the amount paid to unsecured creditors. Creditors shown in the balance sheet included Rs.2,000 preferential. Interest on debentures is to be paid upto 31.5.2018; dividend on Preference Shares is in arrears for 1½% years. Legal charges amounted to Rs.1,000.

Prepare Liquidator's Final Statement of Account.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | | நிலம், கட்டடம் | 4,00,000 |
| 7% முன்னுரிமைப் பங்கு முதல் ஒன்று ரூ. 10 வீதம் 6,000 சாதாரண | 3,00,000 | பொறி எந்திரம் | 1,60,000 |
| பங்குகள் ரூ. 8, செலுத்தப்பட்டது, ஒன்று ரூ. 10 வீதம் 3,000 சாதாரண | 48,000 | சரக்கிருப்பு | 4,00,000 |
| பங்குகள் ரூ. 7 செலுத்தப்பட்டது | 21,000 | கடனாளிகள் | 6,40,000 |
| ஒன்று ரூ. 10 வீதம், 6% கடனீட்டு பத்திரங்கள் | 12,00,000 | ரொக்கம் | 51,000 |
| கொடுபட கடனீட்டுப்பத்திரங்கள் மீதான வட்டி | 72,000 | | |
| செலுத்துவதற்குரிய மாற்றுசீட்டு | 2,000 | | |
| பற்பல கடனீந்தோர் | 8,000 | | |
| | 16,51,000 | | 16,51,000 |

கீழ்க்கண்டவாறு சொத்துக்கள் விற்கப்பட்டன.

நிலம், கட்டிடம் ரூ. 3,50,000, பொறி எந்திரம் ரூ. 2,00,000, கடனாளிகள் ரூ. 6,00,000 சரக்கிருப்பு ரூ. 4,61,000, கலைப்பு செலவு ரூ. 2,000.

கலைப்பாளரின் ஊதியம் (ரொக்கம் உள்பட) சொத்துகள் விற்பனையில் – 1/2 % மற்றும் பிணையிலா கடனீந்தோர்க்கு செலுத்திய தொகையில் 1% ஆகும்.

இறுதி நிலைக் குறிப்பில் காண்பிக்கப்பட்ட கடனீந்தோரில் ரூ. 2,000 முன்னுரிமைக் கடனீந்தோர் ஆவர். 31.5.2018 அன்று வரை கடன்பத்திரம் மீதான வட்டியும் 1½ ஆண்டுகளுக்கான முன்னுரிமைப் பங்குகளுக்கான பங்காதாய பாக்கியும் செலுத்த வேண்டும். சட்டச் செலவுகள் ரூ. 2,000 ஆகும்.

கலைப்பாளரின் இறுதிக் கணக்கை தயாரிக்கவும்.

22. M Company Limited and N Company Limited agreed to amalgamate on the basis of the following Balance Sheets as on 31 .3.2017.

| Liabilities | M | N | Assets | M | N |
|---|---|---|---|---|---|
| | Rs. | Rs. | | Rs. | Rs. |
| Share Capital Rs.25 each | 75,000 | 50,000 | Goodwill | 30,000 | – |
| P & L a/c | 7,500 | 2,500 | Fixed assets | 31,500 | 38,800 |
| Creditors | 3,500 | 3,500 | Stock | 15,000 | 12,000 |
| Depreciation Fund | – | 2,500 | Debtors | 8,000 | 5,200 |
| | | | Bank | 1,500 | 2,500 |
| | 86,000 | 58,500 | | 86,000 | 58,500 |

The assets and liabilities are to be taken over by a new company formed called P Company Limited at book values. 'P Limited's capital is Rs.2,00,000 divided into 10,000 equity shares of Rs.10 each and 10,000, 9% Preference Shares of Rs.10 each.

'P Limited issued the equity shares equally to the vendor companies and preference shares were issued for any balance of purchase price.

Pass journal entries in the books of 'P Limited and prepare its Balance Sheet, if the amalgamation is in the nature of purchase.

31.3.2017 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்புகளின் அடிப்படையில் 'எம்' வரையறு நிறுமம் மற்றும் 'என்' வரையறு நிறுமமும் ஒருங்கிணைய இசைந்துள்ளன.

| பொறுப்புகள் | 'எம்' | 'என்' | சொத்துக்கள் | 'எம்' | 'என்' |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்கு முதல் ஒன்று ரூ. 25 வீதம் | 75,000 | 50,000 | நன்மதிப்பு | 30,000 | – |
| இலாப நட்ட க/கு | 7,500 | 2,500 | நிலை சொத்துக்கள் | 31,500 | 38,800 |
| கடனீந்தோர் | 3,500 | 3,500 | சரக்கிருப்பு | 15,000 | 12,000 |
| தேய்மான காப்பு | – | 2,500 | ஏட்டுக் கடன்கள் | 8,000 | 5,200 |
| | | | வங்கி | 1,500 | 2,500 |
| | 86,000 | 58,500 | | 86,000 | 58,500 |

புதிதாக உருவாக்கப்பட்ட 'பி' வரையறு நிறுமம் சொத்துக்களையும் பொறுப்புகளையும் ஏட்டு மதிப்பில் எடுத்துகொண்டது. 'பி' நிறுமத்தின் முதல் ரூ. 2,00,000 ஆகும். அது ஒன்று ரூ. 10 மதிப்புள்ள 10,000 சாதாரண பங்குகளாகவும், ஒன்று ரூ. 10 மதிப்புள்ள 10,000, 9% முன்னுரிமைப்பங்குகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைப்பு கொள்முதல் அடிப்படையில் செய்யப்பட்டது எனக்கொண்டு 'பி' நிறும ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகளையும் இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிக்க.

23. On 31.3.2018, the Balance Sheet of a Limited Company was as follows:

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share capital | | Fixed assets | 5,00,000 |
| Shares of Rs.10 each | 4,00,000 | Current assets | 2,00,000 |
| Reserves | 90,000 | Goodwill | 40,000 |
| P & L a/c | 20,000 | | |
| 5% debentures | 1,00,000 | | |
| Current liabilities | 1,30,000 | | |
| | 7,40,000 | | 7,40,000 |

On 31.3.2018, the fixed assets were independently valued at Rs.3,50,000 and the goodwill at Rs.50,000. The net profits for the previous three years were: Rs.51,600; Rs.52,000 and Rs.51,650 of which 20% was placed to reserves, this proportion being considered reasonable in the industry in which the company is engaged and were a fair investment return may be taken at 10%. Calculate the value of the company's share by

(a) Net Assets Method and (b) Yield Method.

31.2.2018 அன்று ஒரு வரையறு நிறுமத்தின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புக்கள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் ஒன்று ரூ. 10 வீதம் | 4,00,000 | நிலை சொத்துக்கள் | 5,00,000 |
| காப்பு | 90,000 | நடப்பு சொத்துக்கள் | 2,00,000 |
| இலாப நட்ட க/கு | 20,000 | நன்மதிப்பு | 40,000 |
| 5% கடன் பத்திரம் | 1,00,000 | | |
| நடப்பு பொறுப்புகள் | 1,30,000 | | |
| | 7,40,000 | | 7,40,000 |

31.3.2018 என்று நடப்பு சொத்துக்கள் ரூ. 3,50,000 எனவும் நன்மதிப்பு ரூ. 50,000 எனவும் தன்னிச்சையாக மதிப்பிடப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில் நிகர இலாபம் ரூ. 51,600, 52,000 மற்றும் ரூ. 51,650. இதில் 20% இலாபம் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது. இத்தொழிலில் இருக்கும் பிற நிறுவனங்களின் அடிப்படையில் இது நிர்ணயிக்கப்பட்டது. இத்தொழிலில் 10% நியாயமான முதலீட்டு வருவாயாக கருதப்பட்டது. (அ) நிகர சொத்து முறையில் மற்றும்

(ஆ) ஈட்டு மதிப்பு முறையில் பங்குகளின் மதிப்பைக் கணக்கிடுக.

24. The balance Sheet of Tip Top Company Limited discloses the following financial position as on 31.3.2018

| Liabilities | Rs. | Assets | | Rs. |
|---|---|---|---|---|
| Paid up capital | | Goodwill at cost | | 90,000 |
| 90,000 shares of Rs. 10 each | 9,00,000 | Land and Buildings | | 5,25,000 |
| Capital reserve | 1,80,000 | Plant and Machinery | | 2,70,000 |
| P & L a/c | 78,000 | Stock | | 3,45,000 |
| Sundry creditors | 2,13,000 | Book Debts | 2,94,000 | |
| Provision for taxation | 1,65,000 | Less: Provision | | |
| | | For bad debts | 9,000 | 2,85,000 |
| | | Cash at Bank | | 21,000 |
| | 15,36,000 | | | 15,36,000 |

You are required to value the goodwill of the Company for which purpose the following information is supplied:

- ➢ Adequate provision has been made in the accounts for income tax and depreciation.
- ➢ Rate of income tax may be taken at 50%.
- ➢ The average rate of dividend declared by the Company for the past five years was 15%.
- ➢ The reasonable return on capital invested in the class of business done by the company is 12%.

31.2.2018 அன்று டிப் டாப் வரையறு நிறுமத்தின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வரும் நிதிநிலை தகவல்களை அளிக்கிறது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | | ரூ. |
|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட முதல் | | நன்மதிப்பு | | 90,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் | | நிலம், கட்டடம் | | 5,25,000 |
| 90,000 பங்குகள் | 9,00,000 | | | |
| முதல் காப்பு | 1,80,000 | பொறி எந்திரம் | | 2,70,000 |
| இலாப நட்ட க/கு | 78,000 | சரக்கிருப்பு | | 3,45,000 |
| பற்பல கடனீந்தோர் | 2,13,000 | ஏட்டுக் கடன்கள் | 2,94,000 | |
| வரிக்கான ஒதுக்கீடு | 1,65,000 | கழி : ஐயக்கடன் ஒதுக்கு | 9,000 | 2,85,000 |
| | | வங்கி ரொக்கம் | | 21,000 |
| | 15,36,000 | | | 15,36,000 |

பின்வரும் தகவல்களைக் கொண்டு அந்நிறுமத்தின் நற்பெயரைக் கணக்கிடுக.

- ➢ போதுமான அளவு வருமான வரி மற்றும் தேய்மான ஒதுக்குகள் செய்யப்பட்டன.
- ➢ வருமான வரி 50% என எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.
- ➢ கடந்த ஐந்து ஆண்டுகளில் அந்நிறுமம் அளித்த சராசரி பங்காதாயம் 15% ஆகும்.
- ➢ இதே வகையான வியாபாரத்தில் 12% நியாயமான முதலீட்டு வருவாயாக கருதப்பட்டது.